ந.க.அ1/2367/2019 நாள்: 03.03.2020

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, தமிழ்நாடு**
**சாக்கோட்டை ஊராட்சி ஒன்றியம்**
**சிவகங்கை மாவட்டம்**

அலுவலக உதவியாளர் பணியிடங்களுக்கான நேரடி நியமன அறிவிக்கை (Notification)

சிவகங்கை மாவட்டம், சாக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், ஒன்றியத் தலைப்பில் காலியாக உள்ள 2(இரண்டு) அலுவலக உதவியாளர்கள் பணியிடத்தை நிரப்பிட, சாக்கோட்டை ஊராட்சி ஒன்றிய ஆணையரால் ஏற்கனவே வெளியிடப்பட்ட, விளம்பர அறிவிப்பு, ரத்து செய்யப்பட்டு, நேரடி நியமனம் மூலம் நிரப்பிட கீழ்க்கண்ட விபரப்படி இனசுழற்சி மற்றும் இட ஒதுக்கீடு, தகுதி வாய்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

**அலுவலக உதவியாளர்- இரண்டு காலிப்பணியிடம்**

| வ. எண் | பதவியின் பெயர் | காலிப் பணியிட எண்ணிக்கை | இன சுழற்சி (Rotation) | இட ஒதுக்கீடு (Turn) |
|---|---|---|---|---|
| 1. | அலுவலக உதவியாளர் | 2 (இரண்டு) | ஆதிதிராவிடர் (அருந்ததியர்முன்னுரிமை அடிப்படையில் ) (Schedule Caste Arunthathiyars on preferential Basis) | ஆதரவற்ற விதவை பெண் (Women – Destitute Widow) |
| 2. | | | மிகவும் பின்தங்கிய வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் (Most Backward classes and Denotified Communities ) | - |

கல்வித் தகுதி - அலுவலக உதவியாளர் பணியிடத்திற்கு 8-ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.
சிறப்பு தகுதி - மிதிவண்டி ஓட்டத் தெரிந்தவராக இருக்க வேண்டும்

| இனம் | வயது |
|---|---|
| ஆதிதிராவிடர்/ பழங்குடியினர் | விண்ணப்பிக்கும் அன்று 18 வயது பூர்த்தி அடைந்தும் 01.01.2020 அன்று 35 வயதிற்கு மிகாமல் இருக்க வேண்டும் |
| மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் | விண்ணப்பிக்கும் அன்று 18 வயது பூர்த்தி அடைந்தும் 01.01.2020 அன்று 32 வயதிற்கு மிகாமல் இருக்க வேண்டும் |

- அலுவலக உதவியாளர் பணிக்கு ஊதிய கட்டு ரூ.15700 - 50000 (நிலை-1) ஊதியம் நிர்ணயம் மற்றும் இதர படிகள்

**விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:**
ஆணையாளர்/ வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ),
ஊராட்சி ஒன்றியம், சாக்கோட்டை - 630108 சிவகங்கை மாவட்டம்

**நிபந்தனைகள்:**

1. சிவகங்கை மாவட்டத்தில் வசிப்பவராக இருக்க வேண்டும். சாக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்டவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
2. விண்ணப்பதாரர்கள் தங்களது கல்வித்தகுதி, இருப்பிடம் (ரேசன்கார்டு மற்றும் ஆதார் கார்டு) சாதிச்சான்று முன்னுரிமை சான்று, இதர சான்றிதழ் நகலினை சான்றொப்பம் பெற்று விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.
3. இனசுழற்சி, வயது மற்றும் கல்வித் தகுதியற்ற நபர்களிடமிருந்து வரப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
4. விண்ணப்பதாரர்கள் அளித்த தகவல்கள் தவறு என பரிசீலனையில் கண்டறியப்பட்டால் அவரது விண்ணப்பம் தள்ளுபடி செய்யப்படும்.
5. நேர்காணல் மற்றும் சான்றிதழ் சரிபார்ப்பில் கலந்து கொள்வதற்கு பயணப்படி ஏதும் வழங்கப்படமாட்டாது
6. தகுதியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு நேர்முகத் தேர்வு நடைபெறும் இடம் மற்றும் தேதி குறித்து நேர்காணல் கடிதம் ( Call Letter) அனுப்பி வைக்கப்படும்.
7. விண்ணப்பங்கள் உரிய சான்றுகளின் நகல்களுடன் சாக்கோட்டை ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்/ வட்டார வளர்ச்சி அலுவலர்(வ.ஊ), சாக்கோட்டை அவர்களிடம் நேரிலோ அல்லது பதிவஞ்சல் மூலமாகவோ 19.03.2020 தேதியன்று பிற்பகல் 5.45 மணிக்குள் அனுப்பி வைக்க வேண்டும் காலம் கடந்து பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
8. ஒவ்வொரு காலிப் பதவியிடத்திற்கும் தனித்தனியாக விண்ணப்பிக்க வேண்டும்.
9. நியமனத்தை இரத்து செய்வதற்கான அனைத்து அதிகாரமும் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்/வட்டார வளர்ச்சி அலுவலர்(வ.ஊ)க்கு உண்டு.

அலுவலக உதவியாளர் விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் சிவகங்கை மாவட்டம் சாக்கோட்டை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திலும், சிவகங்கை மாவட்ட இணையதளம் www.sivaganga.nic.in இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

ஆணையாளர்(பொ)
ஊராட்சி ஒன்றியம், சாக்கோட்டை

3.3.2020

# ஊரக வளர்ச்சி (மற்றும்) ஊராட்சித்துறை

சிவகங்கை மாவட்டம், சாக்கோட்டை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் காலியாக உள்ள அலுவலக உதவியாளர் பணியிடத்திற்கு சிவகங்கை மாவட்டத்தில் வசித்து வரும் கீழ்க்கண்ட தகுதிகள் கொண்ட நபர்கள் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பங்களை நேரிலோ தபால் மூலமாகவோ அளிக்கலாம்.

| பணியின் பெயர் | அலுவலக உதவியாளர் |
|---|---|
| காலியிடங்களின் எண்ணிக்கை | இரண்டு |
| கல்வித்தகுதி | 8-ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.<br>மிதி வண்டி இயக்கத் தெரிந்திருத்தல் அவசியம் |
| இனச் சுழற்சி | ஆதிதிராவிடர் (அருந்ததியர்முன்னுரிமை அடிப்படையில் ) ஆதரவற்ற விதவை பெண்<br>(Schedule Caste Arunthathiyars on preferential Basis)<br>(Women – Destitute Widow) |
| | மிகவும் பின்தங்கிய வகுப்பினர் மற்றும் சீர்மரபினர்<br>(Most Backward classes and Denotified Communities ) |
| வயது தகுதி (01.01.2020அன்று) | ஆதிதிராவிடர் / பழங்குடியினர் விண்ணப்பிக்கும் அன்று 18 வயது பூர்த்தி அடைந்தும் 01.01.2020அன்று 35 வயதிற்கு மிகாமல் இருக்க வேண்டும் |
| | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் விண்ணப்பிக்கும் அன்று 18 வயது பூர்த்தி அடைந்தும் 01.01.2020 அன்று 32 வயதிற்கு மிகாமல் இருக்க வேண்டும் |
| விண்ணப்பம் வந்து சேர வேண்டிய கடைசி நாள் | 19.03.2020 பிற்பகல் 5.45 மணி வரை |
| விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி | ஆணையாளர்,<br>ஊராட்சி ஒன்றியம்,<br>சாக்கோட்டை |

திரு.எஸ்.ஸ்ரீதர்.,<br>ஆணையாளர(பொ)<br>ஊராட்சி ஒன்றியம்,<br>சாக்கோட்டை.

3.3.2020

## ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை
## சாக்கோட்டை ஊராட்சி ஒன்றியம்

சிவகங்கை மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகில், சாக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் ஒன்றியத் தலைப்பின்கீழ் காலியாக உள்ள அலுவலக உதவியாளர் (இரண்டு) பணியிடத்தை நிரப்பிட, சாக்கோட்டை ஊராட்சி ஒன்றிய ஆணையரால் ஏற்கனவே வெளியிடப்பட்ட, விளம்பர அறிவிப்பு, ரத்து செய்யப்பட்டு, புதிதாக விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. பணி நியமனத்திற்கு, விண்ணப்பிக்கத் தேவையான தகுதிகள், காலிப்பணியிட விபரம், இன சுழற்சி ஒதுக்கீடு மற்றும் விண்ணப்பப் படிவம் ஆகியவை www.sivaganga.nic.in என்ற இணையதளத்தில் இடம் பெற்றுள்ளது. இப்பணியிடத்திற்கான விண்ணப்பங்களை 04.03.2020 தேதி முதல் மேற்படி இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் உரிய சான்றுகளின் நகல்களுடன் சாக்கோட்டை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு அலுவலக வேலை நாட்களில் காலை 10.00 மணி முதல் மாலை 5.45 மணி வரை நேரிலோ அல்லது பதிவஞ்சல் மூலமாகவோ ஆணையாளர், ஊராட்சி ஒன்றியம், சாக்கோட்டை என்ற முகவரிக்கு 19.03.2020 அன்று மாலை 5.45 மணிக்குள் கிடைக்குமாறு அனுப்பி வைக்க வேண்டும்.

ஆணையாளர்(பொ),
ஊராட்சி ஒன்றியம், சாக்கோட்டை

3.3.2020